# குவாட் மூத்த சைபர் குழுமத்தின் கூட்டுப் பத்திரிகை வெளியீடு

டிசம்பர் 15, 2023

டிசம்பர் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் டோக்கியோவில் நடைபெற்ற குவாட் மூத்த சைபர் குழுமத்தின் மூன்றாவது நேரிடையான முதன்மையாளர்கள் சந்திப்பின் விவாதத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் டிசம்பர் 14 அன்று குவாட் மூத்த குழுவினுடைய பின்வரும் கூட்டுப் பத்திரிகை வெளியீட்டை வெளியிட்டனர்:

நாங்கள் — ஆஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சகத்தின் சைபர் மற்றும் உள்கட்டமைப்பு பாதுகாப்பின் உதவி செயலாளர் ஹமிஷ் ஹான்ஸ்போர்ட், இந்தியாவின் தேசிய சைபர் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் எம்.யு. நாயர், ஜப்பானின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் உதவி தலைமை அமைச்சகத்தின் செயலாளருமான கெய்ச்சி இச்சிகாவா, அமெரிக்காவின் சைபர் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கான தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அன்னே நியூபெர்கர் ஆகியோர் மூன்றாவது நேரிடையான குவாட் மூத்த சைபர் குழுமத்தின் (QSCC) முதன்மை கூட்டத்துக்காக ஜப்பானில் உள்ள டோக்கியோவில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பை துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகரும், உதவி தலைமை அமைச்சரவை செயலாளருமான கெய்ச்சி இச்சிகாவா விருந்தோம்பினார்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான எங்களின் உறுதியான உறுதிப்பாட்டை நாங்கள் ஒன்றாக மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். டிஜிட்டல் தொழில்நுட்பம், இணைப்பு மற்றும் மீள்திறனை மேம்படுத்துவதில் உலகத்தின் முதன்மையான நாடுகளில் குவாட் நாடுகள் உள்ளன, மேலும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் தங்கள் அரசாங்க நெட்வொர்க்குகளையும் முக்கியமான உள்கட்டமைப்பையும் சைபர் இடையூறுகளிலிருந்து பாதுகாக்கும் திறனை வலுப்படுத்துவதற்கான திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றன.

சைபர்ஸ்பேஸில் சர்வதேச சட்டத்தைப் பயன்படுத்துவதை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவதோடு முக்கியமான உள்கட்டமைப்பு மீது பிராந்தியத்தில் சைபர் தாக்குதல்கள் நடப்பது குறித்து தீவிரமான அக்கறை இருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்திப்பின் போது, சைபர் முயற்சிகளில் குவாட் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை நாங்கள் வரவேற்றோம். குவாட் சைபர் செக்யூரிட்டி பார்ட்னர்ஷிப்பிற்கான எங்கள் ஆதரவை நாங்கள் மீண்டும் உறுதி செய்துள்ளோம்: பாதுகாப்பான மென்பொருளில் செய்யப்படும் வேலைகள், முக்கியமான உள்கட்டமைப்பின் சைபர் பாதுகாப்பு, விநியோகச் சங்கிலி மீள்திறன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுக் கொள்கையோடு குவாட் சைபர் சேலஞ்ச் நிகழ்வுகள் மூலம் இந்தோ-பசிபிக் பிராந்தியந்தைச் சேர்ந்த பங்கேற்பாளர்களினுடைய சைபர் பாதுகாப்பு, சைபர் விழிப்புணர்வு மேம்படுவது ஊக்குவிக்கப்படும். இந்தோ-பசிபிக் பகுதியில் உள்கட்டமைப்பின் பாதுகாப்பை மேம்படுத்த, திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் இணைய வளங்களைப் பகிர்ந்து கொள்ளும் யோசனையையும் நாங்கள் வரவேற்கிறோம். பாதுகாப்பான சைபர்ஸ்பேஸ் ஆரோக்கியமான, பாதுகாப்பான சமூகத்திற்கு பங்களிப்பதோடு சர்வதேச ஒத்துழைப்பு இதற்கு முக்கியமானது என்ற அங்கீகாரத்தையும் நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்.

இணையத் தாக்குதல்கள் அடிக்கடியும் அதிநவீன முறையிலும் அதிகரித்து வருகின்றன என்ற பகிரப்பட்டதின் அடிப்படையில், முக்கியமான உள்கட்டமைப்பில் தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் செயல்பாட்டுத் தொழில்நுட்பம் (OT) அமைப்புகளின் மீள்திறனைப் பாதுகாப்பதில் மேம்பட்ட ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும்; இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT) தயாரிப்புகளின் இணையப் பாதுகாப்பிற்காக குவாட் நாடுகளின் அடையாளச்சீட்டு திட்டங்களின் பரஸ்பர அங்கீகாரத்தை உறுதி செய்தல்; மற்றும் செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் போன்ற முக்கியமானதும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்தும் விவாதித்தோம். முக்கியமான துறைகளுக்கு நம்பகமான, பாதுகாப்பான மற்றும் மீள்திறன் கொண்ட விநியோகச் சங்கிலிகளின் அவசியத்தையும் நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்தினோம்.

டிஜிட்டல் உள்கட்டமைப்பு, கடலுக்கடியில் உள்ள கேபிள்கள், தொலைத்தொடர்பு நெட்வொர்க்குகள், கிளவுட் சேவைகள் ஆகிய இணைப்புகள் உட்பட பிராந்தியத்தில் பாதுகாப்பானதும் மீள்திறன் கொண்டதுமான சைபர்ஸ்பேஸை உருவாக்குவதற்குத் தேவையான ஒத்துழைப்புத் துறைகள் குறித்து நாங்கள் விவாதித்தோம். QSCG மூலம் பிராந்தியத்தில் திறன் மேம்பாட்டை ஆதரிக்கும் நடைமுறை விளைவுகளை வழங்க இந்தோ-பசிபிக் நாடுகளுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவோ

குவாட் கூட்டாளர்களிடையே இருக்கும் தனிப்பட்ட ஆற்றல் மற்றும் வளங்களை குவாட் சைபர் முன்னெடுப்புகளின் மூலம் அதிக பாதுகாப்பான சைபர் ஸ்பேஸை ஊக்குவிப்பதோடு சுதந்திரமான, திறந்த, மீள்திறனை உள்ளடக்கிய குவாட் தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையிலான இந்தோ-பசிபிக் பிரந்தியாத்தை வழங்குவதோடு அடுத்த குவாட் தலைவர்களின் சந்திப்பின் மீது கவனம் செலுத்துவோம் என்கிற எங்களின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிபடுத்துகிறோம்.

**புது தில்லி**
**டிசம்பர் 15, 2023**